2016 ஆகஸ்ட் 16] [பேரவைத் தலைவர்]

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (17-8-2016) புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5-21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

35. திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டிலுள்ள திருவாளர்கள் ஷேமா மறுவாழ்வு பயிற்சி நிலையம் நடத்திய பயிற்சி வகுப்பின்போது தயாரித்த பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு மற்றும் கால அளவிற்கு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 8-6-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 96-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

36. தமிழ்நாடு மாநில விற்பனை இணையம் (TANFED) மற்றும் தொடக்க கூட்டுறவுச் சங்கங்களால், தேசிய கூட்டுறவு விற்பனை இணையத்திற்காக (NAFED) ஆதார விலைத் திட்டத்தின்கீழ் கொள்முதல் செய்யப்படும் கொப்பரைத் தேங்காய் விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரியிலிருந்து அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 15-6-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 98-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

37. யாதொரு வணிகரால், அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு, கோதுமை விற்பனையின்மீது செலுத்தத்தக்க வரியினை குறிப்பிடப்பட்ட சதவீதம் குறைத்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 29-6-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 99-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]